DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 22.01.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.22/2025 |
| Deposition of Witness for Prosecution | : | PW.1 |
| Name | : | கரியராமன் |
| Father Name | : | வெள்ளிக்கவுண்டர் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 22.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**
**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(12.32.P.M):-**

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், மாரமங்கலம், கேழையூரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகின்றேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி என்னை அடித்தார் அதற்கு உபயோகபடுத்தியது கத்தியா அல்லது கட்டையா என்பது தற்போது ஞாபகம் இல்லை, ஆனால் என்னை கையால் அடிக்கவில்லை. ஆஜர் எதிரி என்னை அடித்ததில் தற்போது சிறிது தொலைவு நடந்தால் மயக்கம் ஏற்படுவது போலவும், தினமும் என்னுடைய வேலையை செய்ய முடியாமலும் உள்ளது. என்னிடம் காட்டப்படும் கட்டையை கொண்டு தான் ஆஜர் எதிரி அடித்தார்.

நான் 15 நாட்கள் சேலம் சரவணா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் சரவணா மருத்துவமனையில் சிகிச்சைக்காக ரூ.1,45,000/- செலவு செய்தேன். தற்போது வரை என்னால்

எந்தவிதமான வேலைக்கும் செல்ல இயலவில்லை. **என்னிடம் காட்டப்படும் மரக்கட்டை அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

1. ஆஜர் எதிரியின் வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் பகல் 09.00 மணியிருக்கும். நான் சம்பவம் நடந்ததற்கு முந்திய நாள் இரவு மது அருந்தியிருந்தேனா என்றால் இல்லை. காலை 09.00 மணிக்கு ஆஜர் எதிரியின் வீட்டிற்கு செல்லும்போது ஆஜர் எதிரி மது அருந்தியிருக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியின் வீட்டில் எத்தனை அறைகள் உள்ளது என்றால் ஆஜர் எதிரியின் வீடு கீற்றுகொட்டாயி ஆகும் ஓர் அறை மட்டுமே உள்ளது.

2. ஆஜர் எதிரி வீட்டின் வாசப்படி எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கு பக்கம் நோக்கி உள்ளது. சம்பவ தினத்தன்று மதுவினை நான் எடுத்துச்சென்றேனா அல்லது எதிரியே வைத்திருந்தாரா என்பது குறித்து போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் ஆஜர் எதிரிக்கும் எனக்கு எதற்காக சண்டை வந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட மருத்துவ செலவான ரூ.1,45,000/-ற்கான ரசீதினை போலீசாரிடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. சரவணா மருத்துவமனை சேலத்தில் எந்த இடத்தில் உள்ளது என்று தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரி எனது நண்பர் என்றால் சரிதான். ஆஜர் எதிரி என்னை மது குடிக்க அழைக்கவில்லை என்றால் சரிதான். மது அருந்திய பின்னர் தான் ஆஜர் எதிரி என்னை அடித்தார். ஆஜர் எதிரியின் வீட்டினை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் வீட்டை சுற்றி உள்ள வீடுகளில் நபர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த தினத்தன்று எனது மகள் பூங்கொடி சம்பவத்தில் உடன் இருந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. ஆஜர் எதிரியின் மீது உள்ள பழைய பகையின் காரணமாக நானே கத்தியை கொண்டு தலையில் வெட்டிக்கொண்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று ஆஜர் எதிரிக்கு எதிராக இவ்வழக்கின் புகாரினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு கையெழுத்து போடத்தெரியாது என்றால் சரிதான். புகாரில் கைரேகை வைத்தேனா என்று தற்போது ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்து எத்தனை நாள் கழித்து புகார் கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. நான் காவல் நிலையம் செல்லவில்லை. போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தனர்.

5. சாட்சி மயக்கம் வருவதுபோல் இருப்பதால் அமர்ந்துகொள்ள அனுமதி கேட்டு அனுமதி அளிக்கப்பட்டது. மயக்கம் வருவது ஏன் என்று விசாரித்தபோது அடிபட்டதற்கு பின்னர் இருந்து அடிக்கடி மயக்கம் வருகின்றது என சாட்சி கூறினார்.

6. ஒரு வருடமாக மயக்கம் ஏற்படுவது குறித்து மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல, சேலம் மருத்துவமனைக்கு சென்றுகொண்டு தான் உள்ளேன். அதற்காக மருத்துவ அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 01.04.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.01.22 14:55:00 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.